# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டம்

[*2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2023,* நவெம்பர் மாதம் *03* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டம்**

[2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 13/2023

**சட்டத் தொழிலில் உயர் புகழையும் உயர் தராதரத்தினையும் வெளிப்படுத்தி அறிவுறுத்தும் சட்டத்தரணிகளாக தொழில்புரிகின்ற சட்டத்தரணிகளால் வழங்கப்பட்ட சேவையை ஏற்றங்கீகரித்து பாராட்டும் நோக்குடன் சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** (1) அதிமேதகு சனாதிபதி, பிரதம நீதியரசர் மற்றும் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அவதானங் களைப் பெற்றதன் பின்னரும், 3 ஆம் பிரிவின்கீழ் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கொண்டும், பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர்நீதிமன்றத்தின் எவரேனும் ஒரு சட்டத்தரணிக்கு சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணி எனும் கௌரவத்தினை அளிக்கலாம்:-

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிக ளுக்கான கௌரவத்தினை அளித்தல்

(அ) அத்தகைய கௌரவத்தினை வழங்குகின்ற திகதியன் றுள்ளவாறு இருபது ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு அறிவுறுத்தும் சட்டத்தரணி யொருவராக முனைப்பான தொழிலிருப்பவராக விருத்தல் வேண்டும்;

(ஆ) சட்டத்தொழில் உயர் புகழை அடைந்திருப்பதுடன் உயர் நடத்தை தராதரங்களையும் தொழில் நேர்மையினையும் பேணியிருப்பவராகவிருத்தல் வேண்டும்;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றவியல் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் உயர்நீதிமன்ற (சட்டத்தரணிகளது நடத்தை மற்றும் ஒழுக்கம்) விதிகள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறை சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் தொழிலாண்மைசார் துர்நடத்தைகளுக்கு குற்றவாளியாகக் காணப்படாதவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) நன்னடத்தைகளும் புகழும் வாய்ந்த ஆளாகவிருத்தல் வேண்டும்.

(2) அதிமேதகு சனாதிபதி அவர்கள், எவரேனும் அறிவுறுத்தும் சட்டத்தரணிக்கு சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணி என்னும் கௌரவத்தினை அளிப்பதன்மேல் அத்தகைய அறிவுறுத்தும் சட்டத்தரணிக்கு அப்பொருள்பட்ட சான்றிதழொன்றைக் கையளித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்தச் சட்டத்தரணிக்குச் சான்றிதழொன்று கையளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சட்டத்தரணி ஒருவர் "சிஅச" என்ற பெயருக்குப் பின்னரான மகுடத்தைப் பயன்படுத்தலாம்.

அமைச்சர் வழிகாட்டு நெறிகளை ஆக்குதல்

**3.** (1) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவத்தை அளித்தல் தொடர்பான வழிகாட்டுநெறிகளை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**4.** இச்சட்டம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:- பொருள்கோடல்

"அறிவுறுத்தும் சட்டத்தரணி" என்பது, அத்தகைய சட்டத்தரணியின் அறிவுறுத்தல்களின்மீது நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு சட்டவுரைஞர் ஒருவருக்கு அறிவுறுத்துவதனை பிரதான தொழிலாக கொண்டவரான சட்டத்தரணியொருவர் எனப் பொருள்படும்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*